ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

सन्दृश्यन्ते कतिचिदधुना नीयमानाः स्वलोकं
कालेनान्ये विकलकरणाश्चाधिभिः पीड्यमानाः ।
दुःखोदन्वत्यपि च कतिचिन्मार्गहीना भ्रमन्ती-
त्येवं जानन्नपि न विरतिर्जायते मे महेश ॥ ७ ॥

ஸந்த்ருஶ்யந்தே கதிசிததுநா நீயமாநா: ஸ்வலோகம்
காலேநாந்யே விகலகரணாஶ்சாதிபி: பீட்யமாநா: ।
து:கோதந்வத்யபி ச கதிசிந்மார்கஹீநா ப்ரமந்தீத்யேவம்
ஜாநந்நபி நவிரதிர்ஜாயதே மே மஹேஶ ।— 7

காலன் என்கிற இயமனுல் இப்பொழுது சில ஜனங்கள் தம் லோகத்தை அடையும்படி செய்யப்படுகிறுர்கள் என்று நேரில் பார்க்கப்படுகின்றது. மற்றும் சிலர் தம் இந்திரியங்களின் குறைவால் எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண்டு க்ஷ்டப்படுகிறுர்கள். வேறு சிலர் சிறந்த மோக்ஷமார்க்கத்தை அடைவதற்கு யோக்யமான மார்க்கத்தை அறிந்துகொள்ள முடியாமல் துக்க ஸமுத்திரத்தில் விழுந்து வழி தெரியாமல் சுற்றுகிறுர்கள். இவைபோன்ற பல விஷயங்களை நன்கறிந்தும் மிகவும் கொடியதான இந்த ஸம்ஸாரத்திலிருந்தும் ஹே மகேச! எனக்கு இன்னும் ஒழிவு ஏற்படவில்லை.

மானிடசரீரத்தை நாம் பெற்றிருக்கிறேம். இது அநித்யமானது. இதற்குப் பலவித கஷ்டங்களுண்டு. ஸம்ஸாரமென்பது மிகவும் துக்கத்தை உண்டுபண்ணக் கூடியது என்று பிரத்தியக்ஷத்தில் நன்கு அனுபவத்தால் அறியப்பட்டிருந்தும் இது உபயோகமில்லை என்று வைராக்கியத்தைப்பெற்று மோக்ஷஸாதனமான வழியில் என்மனம் செல்லவில்லை. ஹே சங்கரா! நீர்தான் அதை நல்வழியில் திருப்பவேண்டும் என்று ஒரு பக்தர் பிரார்த்திக்கிறுர்.

சுபம்!

உபபத்திராதிபர்.

## "உபதேசபஞ்சகம்"

(277-வது பக்கத்தொடர்ச்சி.)

सङ्गस्सत्सु विधीयतां भगवतो भक्तिर्दृढाऽधीयतां
शान्त्यादिः परिचीयतां दृढतरं कर्माशु सन्त्यज्यताम् ।
सद्विद्वानुपसृप्यतां प्रतिदिनं तत्पादुके सेव्यतां
ब्रह्मैकाक्षरमर्थ्यतां श्रुतिशिरोवाक्यं समाकर्ण्यताम् ॥ २ ॥

𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌸𑌤𑍍𑌸𑍁 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑌾𑌂 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑍃𑌢𑌾𑌽𑌧𑍀𑌯
𑌤𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 𑌪𑌰𑌿𑌚𑍀𑌯𑌤𑌾𑌂 𑌦𑍃𑌢𑌤𑌰𑌂𑌕 𑌕𑌰𑍍𑌮𑌾𑌶𑍁 𑌸𑌂𑌤𑍍𑌯
𑌜𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 𑌸𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑌸𑍃𑌪𑍍𑌯𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑍁𑌕𑍇
𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑍋 𑌵𑌾
𑌕𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌕𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ॥

முதல் சுலோகத்தில் குடும்பத்திலிருந்தால் ஸம்ஸாரபந்தம் விலகாது. ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறமுடியாது. ஆகையால் உன் கிரஹத்திலிருந்தும் சீக்கிரம் வெளியிற் சென்று விடு என்று முடிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் ஒரு மனிதன் வெளிவந்தால் பிறகு அவன் செய்யவேண்டிய கார்யம் என்னவென்பதை இதினால் அறிவிக்கிறார்.

सङ्गस्सत्सु विधीयताम् 𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌸𑌤𑍍𑌸𑍁 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑌾𑌮𑍍

ஸஜ்ஜனங்கள் எங்கு வஸிக்கிறார்களென்று தேடிச்சென்று அவர்களுடன் பழகவேண்டும். ஸஜ்ஜனங்களின் இலக்கணம் யாது? அவர்கள் எப்படியிருப்பார்கள் என்றால்

नम्रत्वेनोन्नमन्तः परगुणकथनैः स्वान् गुणान् ख्यापयन्तः
स्वार्थान्सम्पादयन्तो विततपृथुतरारम्भयत्नाः परार्थे ।
क्षान्त्यैवाक्षेपरूक्षाक्षरमुखरमुखान् दुर्जनान् दुःखयन्तः
सन्तश्चाश्चर्यचर्या जगति बहुमताः कस्य नाभ्यर्थनीयाः ॥

𑌨𑌮𑍍𑌰𑌤𑍍𑌵𑍇𑌨𑍋𑌨𑍍𑌨𑌮𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌗𑍁𑌣𑌕𑌥𑌨𑍈𑌃 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌖𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌸𑌮𑍍𑌪𑌾𑌦𑌯𑌨𑍍𑌤𑍋 𑌵𑌿𑌤𑌤𑌪𑍃𑌥𑍁𑌤𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌯𑌤𑍍𑌨𑌾𑌃 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑍇 । 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑍈𑌵𑌾𑌕𑍍𑌷𑍇𑌪𑌰𑍂𑌕𑍍𑌷𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑍁𑌖𑌰𑌮𑍁𑌖𑌾𑌨𑍍 𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌾𑌨𑍍𑌦𑍁𑌃𑌖𑌯𑌨𑍍𑌤𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌸𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌚𑌰𑍍𑌯𑌾 𑌜𑌗𑌤𑌿 𑌬𑌹𑍁𑌮𑌤𑌾𑌃 𑌕𑌸𑍍𑌯 𑌨𑌾𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌨𑍀𑌯𑌾𑌃 ॥

எவரிடமும் வணக்கத்தையும் மரியாதையையும் காண்பிவித்து அதினல் பிறர் தம்மை அதிகம் கௌரவிக்கும்படி செய்துகொள்வார்கள். பிறரிடம் அற்பகுணமிருப்பினும் அதைப்பெரிதாகக் கருதித் துதித்து அதினல் தங்களிடம் அதிக குணங்களிருக்கென்று எல்லா ஜனங்களும் போற்றும்படிச் செய்வார்கள். இதர ஜனங்களுடைய காரியங்களை எப்பொழுதும் மிகுந்த ஊக்கத்துடன் செய்து கொடுப்பதால் தமக்கு வேண்டிய பொருளுதவியை ஸம்பாதனம் செய்துகொள்ளுகிறவர்களாயும் அதிக துஷ்டர்களாயிருந்து தமக்குத் தோன்றியபடி எல்லாம்கெட்டவார்த்தைகளைப் பேசுகிற துர்ஜனங்களையும் தாங்கள் மிகவும் பொறுமையுடனிருந்து கொண்டு அதினல் அவர்களுக்கு துக்கத்தையுண்டு பண்ணுகிறவர்களுமான ஸஜ்ஜனங்கள் ஆச்சர்யப்படும்படியான தம் நடத்தையால் விசேஷ கௌரவம் பெற்றவர்களாய்க் கொண்டு ஸகல ஜனங்களாலும் பிரார்த்திக்கப்படுகிறார்கள் என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். இந்த லக்ஷணம் பொருந்திய ஸத்துக்களுடன் பழகுவதால் நமக்கு ஏற்படும் பிரயோஜனம் என்னவென்பதையும்ஒரு கவி அடியில் வருமாறு வெளியிடுகின்றார்.

जाड्यं धियो हरति सिञ्चति वाचि सत्यं मानोन्नति दिशति पापमपाकरोति।
चेतः प्रसादयति दिक्षु तनोति कीर्तिं सत्सङ्गतिः कथय किं न करोति पुंसाम्॥

𑌜𑌾𑌡𑍍𑌯𑌂 𑌧𑌿𑌯𑍋 𑌹𑌰𑌤𑌿 𑌸𑌿𑌞𑍍𑌚𑌤𑌿 𑌵𑌾𑌚𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌮𑌾𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑌿𑌂 𑌦𑌿𑌶𑌤𑌿 𑌪𑌾𑌪𑌮𑌪𑌾𑌕𑌰𑍋𑌤𑌿 । 𑌚𑍇𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑌤𑌿 𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌤𑌨𑍋𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑌿𑌃 𑌕𑌥𑌯 𑌕𑌿𑌂 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌪𑍁𑌂𑌸𑌾𑌮𑍍 ॥

ஸத்ஸங்கமானது ஸகல துக்கங்களுக்கும் காரணமான புத்தியினுடைய ஜாட்யத்தை அறவே போக்குகின்றது. வாக்கால் எப்பொழுதும் ஸத்யத்தையே பேசும்படி செய்கிறது. எல்லாஜனங்களாலும் மரியாதை செய்யும்படி செய்கிறது. பாபங்களைவிலக்குகின்றது. புத்திக்கு அதிகமான பிரஸாதத்தைக்கொடுக்கின்றது

ஸகலதிக்குகளிலும் சிறந்த கீர்த்தியைப் பரவச்செய்கின்றது. இவ்விதம் எதெதை விரும்பினாலு அவை அனைத்தையும் ஸத்ஸங்கமானது அவச்யம்செய்யும்.

பின்னும் மோக்ஷமென்றும்பரமபுருஷார்த்தத்தைப்பெறுவதற்கும் இந்த ஸத் ஸங்கமே முக்கியஸாதனம் இந்த அபிப்பிராயத்தையே

मोक्षद्वारे द्वारपाला श्चत्वारः परिकीर्तिताः ।
शमो विचारःसन्तोषश्चतुर्थस्साधुसङ्गमः ॥
𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑌪𑌾𑌲𑌾 𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌶𑌮𑍋 𑌵𑌿𑌚𑌾𑌰𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌸𑍍𑌸𑌾𑌧𑍁𑌸𑌙𑍍𑌗𑌮𑌃 ।

மோக்ஷமென்னும் வீட்டிற்கு நான்குதுவாரபாலகர்கள். அவர்களில் முதலாவது சமம். இரண்டாவது விசாரம், மூன்றாவது ஸந்தோஷம், நான்காவது ஸாதுஸங்கம், என்று ஸாதுஸங்கத்தை அந்தரங்க ஸாதனமாக ஸ்ரீமத்யோகவாஸிஷ்டத்தில் கூறியிருக்கிறார். ஸ்ரீமஹாபாரதத்திலும்.

महत्सेवा द्वारमाहुर्विमुक्तेः 𑌮𑌹𑌤𑍍𑌸𑍇𑌵𑌾 𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌾𑌹𑍁𑌰𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌃

மஹான்களுடைய ஸேவையானது முக்தி வீட்டிற்கு முதல் த்வாரமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஸம்ஸாரதுக்கத்தை விலக்கி மோக்ஷத்தை அடைய விருப்பமுள்ளவர்களுக்கு ஸாது ஸங்கம் முக்கியமாகவேண்டியதுதான்.

---

உபபத்திராதிபர்.

# The Hindu Tract Soeiecty.

## KUMBAKONAM.

## ஸநாதனதர்மப் பிரசாரகஸபை,

### கும்பகோணம்.

பிரசுரம் ௪] விவாக வயது நிர்ப்பந்தம். [21—6—28.

## டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளுக்கு,

### (சில கேள்விகள்)

சென்னைச்சட்டசபையில், பெண்களுக்கு 16-வயதுக்குமுன்னும், ஆண்பிள்ளைகளுக்கு 21-வயதுக்கு முன்னும், விவாகம்பண்ணக்கூடாதென்று, 1928௵ மார்ச்சுமீ 27-உயில் தாங்கள்பேசியிருக்கிற பேச்சில்,

1. இந்துக்களுள் மேல் வகுப்பார் குலங்களில் பெண்குழந்தை பிறந்தால், அளவற்ற வியாகுலத்தை அடைகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறீர், தங்கள் மதிப்பில் மேல்வகுப்பார் யார்? கீழ்வகுப்பார் யார்? அவர்கள் என்னென்ன ஸங்கியை? எந்த வகுப்பினர் ஏக்கமுற்று, எங்களைக் காப்பாற்றவேண்டும், என்று தங்களைக் கேட்டுக்கொண்டனர்? இந்துக்களுக்குள்ளும் மேல் வகுப்பாரிற் சிலர், சில கஷ்டங்களுக்குட்பட்டிருப்பின், மற்ற இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸிலீம்கள் எல்லாருக்குமே அவசியம் இருப்பதுபோல, தமது தீர்மானத்தை விரித்து வரைந்த காரணமென்ன?

2. "தம் பெற்றோருக்குச் செலவும் தொந்தரவும் இல்லாமல் நீங்கும்பொருட்டு, அநேக கன்னிகைகள் கிரோஸின் எண்ணெயில் தம்மைப் பொசுக்கிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறீர். 'அநேகம் என்றால் ஆயிரமா, ஐநூறு? வங்காளத்தில் நடந்த ஒரு கேஸைத்தவிர, அம்மாதிரி கேஸுகள் எவ்வளவு? இதிருக்கட்டும் பரீக்ஷைகளில் தேரவில்லையென்று தம் உயிரை மாய்த்துக்கொண்ட மாணவர் எத்தனை பேர்? இவர்கள் அதிக பேர்களா, அல்லது தாம் சொல்லும் பெண்கள் அதிகபேர்களா? பரீட்சகர்களை தண்டித்துப் பாலர்களைக்காப்பாற்ற ஒரு மசோதா கொண்டுவரப் போகிறீரா?

3. "விவாகமானவுடன் பெண்களுக்கு ஆடைகளையும், ஆபரணங்களையும் தவிர வேறு நினைவில்லை" என்று சொல்லியிருக்கிறீரே. இது ஏழைகளைப் பற்றியா? பணக்காரர்களைப்பற்றியா நம் நாட்டில்ஏழைகள் எத்தனைபேர்? பணக்காரர்கள் எத்தனை பேர்? எந்த நாட்டு ஸ்திரீகளுக்கு ஆடையாபரணங்களில் சபலமும் ஆசையும்இல்லை. தம் கணவர்கள் நிர்வஹிக்கமுடியாத அளவு டம்பச்செலவுகள் செய்யும் வழக்கம் ஐரோப்பிய மாதுகளினிடம் மிகுதியா? இந்தியா மாதுகளினிடம் மிகுதியா? வரவுக்குமிஞ்சி செலவு செய்யும் டம்பவாழ்வுசென்னை நகரில்பரவியிருக்கும்அளவு உள்நாட்டுப் பிரதேசங்களிலும்இருக்கின்றதென்றுசொல்லஎன்ன ஆதாரம்? சென்னைக்கு வெளியே தங்களுக்கு நேரில் தெரிந்த அனுபவம் எவ்வளவு? பதினாறு வயதுக்குட்பட்ட பெண்களுக்குத்தான் நகைகள், புடவைகள், மீது ஆசையுண்டா? அவ்

வயது தாண்டினவுடன் அவ்வாசையும் விட்டுப்போகிறதென்று தாம் எங்கிருந்து கண்டறிந்தீர் ?

4. "ஸீமந்த தினத்தன்று ரொம்பவும் அடிக்கடி கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்ப விச்சித்தி உண்டாகிறது" என்று சொல்கிறீர். இது கதையா ? நிஜமா ? அம்மாதிரி ரொம்ப அடிக்கடி நிகழ்கிறது. நாட்டிலா, நகரத்திலா ? எந்த வகுப்பாரில் ? "ஸீமந்தம்" செய்வது எந்த வகுப்பாரின் வழக்கம் ? அதிலும், தாம் குறிப்பிட்டிருக்கிறபடி மேளம்கொட்டி மணையில் வைத்துப் பாடி விசேஷமாய்க் கொண்டாடுபவர் பிராம்மணர்களைத் தவிர இதரர் உண்டா ? தங்கள் வார்த்தைக்குச் சான்றான உதாரணம் எத்தனை கூறமுடியும் ? ஒன்றிரண்டு உதாரணம் ஒரு கோடிக்குச் சான்றுமோ ? தாம்-பொதுவாய் டாக்டர் முறைமையில் தெரிந்துகொண்டிருக்கும் குடும்பத்தார் சென்னைவாஸிகளல்லவா அவர்கள் இங்கிலீஷ் படித்து புது நாகரீகப்பான்மையில் இருப்பவர்கள்; உட்கார்ந்தும், குனிந்தும், பேனவை ஒட்டிப்பொழுதைப் போக்கிப்பொருள் சம்பாதிப்பவர்கள் நெருங்கிய ஜாகைகளில் கசங்கி வசிப்பவர்கள் தம் முன்னோர் சிக்கென வாழ்வைவிட்டு, இந்நாள் டம்பவழிகளை ஏற்றவர்கள். அவர்கள் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டித் தமக்குத் தோன்றும் தோற்றங்களெல்லாம், இவ்விராஜதானியிலுள்ள நாலுத்திருப்பத்தைந்து லக்ஷம் ஜனங்கள் விஷயத்திலும் பொருந்தும் என்று சொல்ல என்ன ஆதாரமிருக்கிறது ?

5. அர்த்தமில்லாப்பொட்டை வழக்கம் (Blind MeaningLess)custm அறிவற்ற மூடநம்பிக்கை (Ignorant Supersitition( முட்டாள் தனமான ஆசாரங்கள் (Foolish Acharams) பையித்தியக்கார வழக்கம் Mad Custom) என்று பலவிதமாய்வாய்வந்தபடியெல்லாம் வசைச் சொற்கள் பொழிந்திருக்கிறீரே பெண்களுக்கு விவாகம் ஒரு ஸம்ஸ்காரம் என்றும், பெண்கள் ப்ரௌடையாகும் முன்னரே அது செய்யவேண்டுமென்றும், மகரிஷிகள் விதித்திருக்கிறதைக் கோடிக்கணக்கான குலமக்கள் நம்பி நடக்கின்றனரென்று தமக்குத் தெரியுமா ? ஆயிரக்கணக்கானவருஷங்களாக கோடிக்கணக்கான நம் முன்னோர்கள் இவ்வழக்கத்தை அனுஷ்டித்து வந்திருக்கிறார்களென்று தாம் அறிவீரா ? அன்ன

வர் சந்ததிகளில் அற்புத சக்திவாய்ந்த ஆயிரக்கணக்கான பெரியோர்கள் ஜனித்திருக்கிறார்களே அது எக்காரணம்பற்றி, என்று தாம் எப்போதாவது சிந்தித்திருக்கிறீரா? உம்மிலும்வேறான எண்ணங்களையும், பழக்கங்களையும் உள்ளவர்களெல்லாம் "அர்த்தமில்லாதவர்கள், அந்தர்கள், மூடர்கள்" என்று எளிதாய்பேசிவிடுவது பெரும் பேதமையென்று இன்னொருதரம் யோசித்தாலாவது தமக்குப்புலப்படுமா?

6. "அறிவும் அனுபோகமும் இல்லாப் பெண்கள் பிரஸவிப்பதால் குழந்தைகளை அவர்கள் சரிவர சம்ரக்ஷிக்காமல், பெரும்பாலும் குழந்தைகள் மரித்து விடுகின்றன" என்று சொல்லியிருக்கிறீர். எந்தப்பெண்ணும், முதற் குழந்தை பெறுங்காலத்தில் எத்தனை வயதில் பெற்றாலும் முந்திய அனுபோகம் இல்லாமல் தானே பெருகிறாள். தனக்கு முன் பெற்று வளர்த்தவர்களைப் பார்த்தும், கேட்டுமே, தானும் தாய்க்கடமை செய்கிறாள். ஆயின் இளந்தாய்கள் குழந்தைகளைப் பிழையாய் வளர்க்கிறார்கள் என்று சொல்வதின் கருத்தென்ன? நம் நாட்டுப் பெண்களெல்லாம் அநாதைகளா? அவர்களை இமையுட்கண்போல ஏற்றமாய்க் காப்பாற்ற அன்பும் முன் அனுபவமும் உள்ள தாய்மாரும், தமக்கைமாரும், பாட்டிமாரும், இல்லையா? இருபதில் பெற்றாலும் பெற்ற பிள்ளையை 'ஆயா' வசம் ஒப்பிவித்துவிட்டு பந்தடிக்கவும், பப்ளிக்வேலை (Public Work) செய்யவும் பறந்து திரிந்திடும் பெண்களைக்காட்டிலும், எவ்விதத்தில் குலத்தினுள் அடங்கிக் குழந்தைகளை வளர்க்கும் பெண்கள் தாழ்ந்தவர்.

7. "10, 12, அல்லது 13 வயதுள்ள பெண்ணுக்கு விவாஹத்தின் கருத்துத் தெரியுமா" என்று கேட்கிறீர். 14, அல்லது 16-வயது தான் ஆனபின் தெரியுமா? விவாகத்தைப்பற்றி ஸாமான்யமாய் 14, 16-வயதில் என்ன தெரியக் கூடுமோ, அது 12-வயதிலும் தெரியக் கூடாதென்பது என்ன நிர்ணயம்? தெளிவாய் அறிந்து பொறுப்பாய்த் தேர்வதற்கு, பதினாறு தான்போதுமான வயதா? பதினெட்டு முடியும் வரை மைனர் எனக்குறிப்பிட்டு மைனராயிருப்பவர் தம் சொத்து விஷயமாய்க் கூட விநியோகம் செய்ய அர்கமில்லை என்பது சாதாரணக் சட்டமல்லவா? ஆயின் குலம் தெரிந்து குணம் அறிந்து தன் சரீரத்தையும் வாழ்

க்கையையும் ஒப்புவிக்க இவன்தான் தகுந்தவன் என்று பொறுப்புடன் வரிக்க, 14 அல்லது 16 வயது ஆன பெண்ணுக்குத்தான் முடியுமா? கன்னி ரூபத்தையே தேடுவாள் தந்தை வித்தையுள்ளவனையும், தாய் பணமுள்ளவனையும், சுற்றத்தார் குலத்தி லுயர்ந்தவனையும் கன்னிக்குக்கணவனாக விரும்புவார்என்ற மூத்தோர் வார்த்தையின் கருத்தைத் தாம் கவனித்திருக்கிறீரா? நம் தேசத்துப் பெண்களெல்லாம் தாய் தந்தையாற்ற அநாதைகளாகப் போனபின்பல்லவா, தன் பொறுப்பும் முதிர் வயதும் வந்த பின்னரே பெண்கள் மணக்கலாம் என்று சட்டம் செய்யத் தாம் முற்படவேண்டும்.

இதிருக்கட்டும் இன்நாட்டிலுள்ள லக்ஷக்கணக்கான சிறுவர் சிறுமியரின்க்ஷேமமும் நல் வாழ்வும் அவர்களைப் பெற்று வளர்த்தார்களே அத்தாய் தந்தையரின் பொறுப்பா? அல்லது தங்கள் பொறுப்பா? தம்மக்களுக்கு ஆஹாரமிட்டு, ஆடையுடுத்தி, ஆபரணம் பூட்டி பலவிதமாகவும் அளவற்ற கவலையும் ஏற்று, தம் வயிற்றையும் ஒடுக்கிச் செலவுகளும் செய்து, அம்மக்களின் சௌக்யத்தையும் க்ஷேமத்தையும் அன்புடன் தேடி அமைத்து வைக்கிறார்களே, அப்பெற்றோர்களைக் காட்டிலும் அக்குழந்தைகள் விஷயத்தில் தமக்குத்தான் பொறுப்பும் கவலையும் ஜாஸ்திபோல் நீர்தான் பேசினாலும், அதை யார்தான் நம்புவார்? அந்த உம்கொள்கை நேராகுமா? நிலைக்குமா? நான் சொல்லுகிறபடியல்லாது வேறுவிதமாய்த் தம் மக்களுக்கு மணம் புரிந்திடும்பெற்றோர்களை, ஜெயிலிலிடுவேன், அபராதம் போடுவேன் என்று அன்னியர் ஒருவர் அதிக்ரமம் பேசினால் தெய்வம் ஸஹிக்குமா? ஆண் மக்கள்ஏற்பரா? கலியாணப்பந்தலிலும் கலகமிடமுற்படுதல்,ஸ்வாராஜ்யத்தின் உதயமா, அல்லது நீதிநெறியின் புரக்ஷியா?

(இன்னும் வரும்)

*N. B.* இதை வேண்டுவோர் மறு அச்சுச் செய்துகொள்ளலாம்.

## மனிதர்களால் ஜலத்தில் செய்யக்கூடிய அசுத்தங்களாவன.

(244-வது பக்கத்தொடர்ச்சி)

**नाप्सु निष्ठीवेत् । நாப்ஸு நிஷ்டீவேத் ।**

வேதம் சொல்வது ஜலத்தில் வாய்க்கொப்பளித்து உமியாதே அதன் விபரம். பல்தேய்த்துக்கொண்டு ஜலமத்தியில் நின்றுகொண்டு அந்தச் சாம்பலையும், வாய் அசுத்தங்களையும், ஜலத்தில் கரைப்பது, கொப்பளித்து ஜலத்தில் உமிழ்வது. ஜலத்தில் காரித்துப்புவது. கை முழுவதையும், வாயில் விட்டு வாந்தியெடுத்து ஜலத்திலேயே உமிழ்வது அந்த அசுத்தங்கள் ஜலத்தில் மிதந்துகொண்டு பக்கத்தில் ஸ்நானம் செய்பவரின் சரீரத்தில் ஸம்மந்தப்பட்டு அருவெறுப்பை உண்டுபண்ணி, ஸ்நானத்தால் ஏற்பட்ட பரிசுத்தத்தையும் குறைத்து அந்த தோஷத்தை உமிழ்பவன் அடைகிறான். அந்த ஜலத்தைக் குடங்களில் மொண்டு வீடுகளில் சமயல் அன்னுதிவஸ்துக்கள் பாகம், அந்தப்பாகம் ஆராதனம், அதிதிபூஜை ஸாதுக்கள் உட்கொண்டு செல்லுகிறார்கள். இதனால் ஜலத்தில் அசுத்தம் செய்தவன் அடையும் தோஷத்திற்குக் கணக்கில்லை. இன்னமும் வேதம் சொல்வது.

**नाप्सु मूत्रपुरीषं कुर्यात् । நாப்ஸு மூத்ரபுரீஷம் குர்யாத் ।**

இதன் விவரம்சுத்தமான ஜலத்தில் அழுக்கு வஸ்திரங்கள் தோய்த்தல். மயிர் நகங்கள் மல் மூத்திரங்கள் விடுதல் மாம்ஸங்களை ஜலத்தில் கழுவுதல். அழுகின வஸ்துக்களைக் கழுவுதல். மாடுகள், குதிரைகள், நாய்கள், கோழிகள், இவைகளை ஜலத்தில்இறக்கி குளிப்பாட்டுவது அந்த ஸமயத்தில் அவைகள் ஜலத்திலேயே அசுத்தங்களைச்செய்வது இவைகளால் ஜலம் தன்மைவேறுபட்டுப்பிராணிகளின் சுகத்தைக்கெடுக்கிறது.

குளங்களில் வரிசையாய் உட்புரம் உட்கார்ந்து பல்தேய்த்து அசுத்தப்படுத்துவது, எண்ணை இட்டு அரப்புத் தலையுடன் ஸ்நானம்செய்வது, இதுவுமல்லாமல் ஸ்திரீகள்வீட்டிலுள்ள பாத்திரங்களையும், சாம்பலையும், கோமயத்தையும், புளிமொத்தைகளையும் அடுப்புக்கரியையும், வாரிக்கொண்டுவந்து பாத்திரங்களைத் தேய்த்து அவைகளை ஜலத்தின் ஓரத்திலேயே எறிந்துவிட்டுப் போவது

ஸ்திரீகள் மாசதர்மத்தால் ஏற்படும் அசுத்தங்களைப் பிரத்தியக்ஷமாய் ஜலத்தில் சேர்ப்பது, சவுக்காரம் உபயோகித்து உடம்பு குளிப்பது, இவைகளால் ஜலம் கெட்டு ஜனங்களுக்கு காலரா, நரம்புச்சிலந்தி யானைக்கால், க்ஷயம், படை, முதலிய தொத்து வியாதிகள் உண்டாகின்றன. அசுத்த ஜலம் பட்ட மாத்திரத்தில் மயிர்க்காம்பு வழி உட்சென்று வியாதிகள் ஸங்கிரமிக்கின்றன. இவைகள் ஜனங்களுக்கு நன்ருய்த் தெரிந்திருந்தும், அறியாத தன்மையாலும். சோம்பலினாலும், உபேக்ஷையாலும், ஸம்பாவிதங்களே யொழிய வேறில்லை. இதன் விவரம் கர்மகாண்ட ரீதியாய் உள்ளவைகள் மேலே வரும். இவைகளைத் தடுப்பதற்கு அரசாங்கத்தாரும் காவலென்றும் பிரதான வைத்தியர் பார்வை என்றும் ஜலத்தை சுத்தம் செய்வது என்றும், எத்தனையோ ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள். விளம்பரங்கள் பெரிது பெரிதாய் போடப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம்ஜனங்களுக்குஜலத்தின் உபயோகம், தன்மை, அதை சுத்தமாய் வைத்துக்கொள்ளவேணுமென்று ஞாபகப்படுத்துவதற்கே யொழிய வேறில்லை. அவர்களை எப்படியாவது தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமென்கிற கருத்தல்ல. பகலில் தானே காவல், இராக்காலங்களில் என்ன செய்வானென்று இராத்திரிகளில் குளங்களுக்கு வந்து வஸ்திரம் துவைப்பது, வஸ்திரமில்லாமல் நீராடுவது, செய்யத்தகாத அசுத்தங்களைச் செய்வது பிரத்யக்ஷ சௌசம் செய்வது, இவைகள் கூடாதாயின. பகலில் ஒருவனுக்குப் பயந்தும், இரவில் தோணிய படி செய்வதும், அவர்களின் அறியாத்தனமேயொழியவேறில்லை

இப்படிச் செய்வதையொழிப்பது மிகவும் நன்மை. இல்லாமல் ஒருவன் மறைவாய் ஒரு பாபத்தைச் செய்தால் அது அவனுக்குப் பாதகமாகவேயாகும்.

> गुरुरात्मवतां शास्ता राजा शास्ता दुरात्मनाम् ।
> इह प्रच्छन्नपापानां शास्ता वैवस्वतो यमः ॥

> குருராத்மவதாம் ஶாஸ்தா ராஜா ஶாஸ்தா துராத்மநாம் ।
> இஹ ப்ரச்ச²ந்நபாபாநாம் ஶாஸ்தா வைவஸ்வதோ யம꞉ ॥

ஆத்மஞானத்தை விரும்பும், உத்தமனுக்கு நேரிடும் தோஷங்களை நீக்க ஞானோபதேசம் செய்யும் குருவும், கள்ளர் முதலியதுஷ்டர்களுக்குத் தண்டனுதிகாரி அரசனென்றும். இந்த லோகத்தில்

மறைவாய்ச்செய்யும் பாபங்களுக்குயமன்தண்டனுதிகாரிஎன்றும் இருக்கிறது. ஆனதால் பாபத்தை எப்பவும் தாண்டமுடியாது.

மனம், மொழி, மெய்களால்செய்யக்கூடிய பாபங்களைச்செய்யாமல்விடுவதால் எல்லா நன்மையையும்அடையலாம்.அப்படிமாடுகுளிப்பாட்டல் முதலிய காரியங்களுக்கு வெளியில்எடுத்துச்செய்வதால்பாதகம்வாராது. இப்படிஜலத்தைவைத்துக்கொள்ளும்விதம். இனிஜலத்தைசுத்தப்படுத்தும்முறைசொல்லப்படும்.

ஜலத்தின் சுத்தி பலவிதங்களிருக்கின்றது. 1. முதலில் பாத்திரத்தை உள்ளும் புறமும் நன்றாய் தேய்ப்பது. பிறகு ஜனங்கள் இறங்கிக் கலக்கிவிடாத இடத்தில் எடுப்பது. பிறகு வடிக்கட்டுவது. ஜலத்தை வடிக்கட்ட வேணுமென்பதற்கு ஆதாரம், இக்கலியுகம் மூவாயிரத்திச்செல்லான காலத்தில் உலகம் ஸன்மார்க்க வழக்கம் கெட்டு இருக்கையில் தேவர்கள் கவலையடைந்து சிவபெருமானை துதிக்க சிவபெருமான் தேவர்களை அனுக்கிரகித்து பூமியின் கண் சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளாய் அவதரித்து ஸகல மதங்களையும் வென்று அத்வைத மதத்தை ஸ்தாபித்தார். அம்மஹான் ஒரு சமயம் பரதேவதையை மானஸீக பூஜாவிதிப்படி பூஜிக்கையில் பூஜோபசாரங்களில் ஜலோபசாரம் செய்யும் போது

अतिशीतमुशीरवासितं तपनीये कलशे निवेशितम् ।
पटपूतमिदं जलामृतं शुचिगङ्गाजलमम्ब पीयताम् ॥

𑌅𑌤𑌿𑌶𑍀𑌤𑌮𑍁𑌶𑍀𑌰𑌵𑌾𑌸𑌿𑌤𑌂 𑌤𑌪𑌨𑍀𑌯𑍇 𑌕𑌲𑌶𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌟𑌪𑍂𑌤𑌮𑌿𑌦𑌂 𑌜𑌲𑌾𑌮𑍃𑌤𑌂 𑌶𑍁𑌚𑌿𑌗𑌙𑍍𑌗𑌾𑌜𑌲𑌮𑌮𑍍𑌬 𑌪𑍀𑌯𑌤𑌾𑌮𑍍 ।

என்று சொன்னார். ஹே அம்பா ! தாயே அதிக குளிர்ச்சியாயும் விலாமிச்சவேர் வாஸனை கட்டியதும், தங்கக்கலசத்தில் வைத்ததாயும், வஸ்திரத்தால் வடிக்கட்டினதாயும், உள்ள சுத்தமான கெங்காஜெலம்குடிக்கத்தக்கது என்றார். இதனல் வஸ்திரசுத்தி பூர்வபூர்வமாயும்சாஸ்திரஸம்மதமானதாயும், பெரியோர்களால்அனுஷ்டித்துக்காட்டினதாயும் உள்ளது. கெங்காஜலமானலும்வடிக்கட்டவேண்டியது என்றுஆகிறது.

2. இப்படி வடிக்கட்டின ஜலத்தை ஒருபாத்திரத்தில் கொஞ்சநாழிகை வைத்திருந்து மறு பாத்திரத்தில் விடுவது. இதனல் அதிலுள்ள கெனவஸ்துக்கள் அடியில் தங்கிவிடும்.

3. வண்டல் ஜலமாயிருந்தால் தேற்ருவினை முதலியவற்ருல் தேத்தி வண்டலைநீக்கிவடிக்கட்டியுபயோகிப்பது.

4. ஜலத்தை நன்ருய்க் காய்ச்சி ஆற்றிவடிக்கட்டி உபயோகிப்பது.

5. சிலர் அடுப்புக்கரியால் சுத்தம் செய்கிருர்கள். அதை அனுசாரமென்று நம் முன்னேர்கள் விலக்கி இருக்கிருர்கள். தெரியாமல் விட்டுவிடவில்லை. கரியானது எலும்புக்கு ஸமானமென்றும் எலும்பைத்தொட்டால் ஸ்னானம் செய்யவேணும் அதனுல் அதை விட்டுவிட்டார்கள். கரி அடுப்பு விஷயமும் அனுசாரந்தான். அதுதான் உலகத்தில் அதிகமாயிருக்கிறது

6. ஜலத்தை வாலை முதலிய எந்திரங்களால்ஸ்வேதப்படுத்தி உபயொகிப்பது.

7. மழை ஜலத்தைப் பிடித்து உபயொகிப்பது. அதுவும் முன் மழைவிட்டு பின்மழையில் பிடிக்கவெணும். ஆனுல் ஜலம் பூஸ்பர்சமானுல் சுத்தியென்றும் தேங்கின புது மழை ஜலமானுல் பத்து நாள் கிரமித்து எடுக்கவெணும் என்றும் ஸ்மிருதியில் உள்ளது

8. சீனிக்காரம் முதலியவற்ருல் ஜலத்தைதேத்துகிருர்கள் சீனிக்காரத்திற்கு வயத்துப்புண் முதலியவற்றை ஆற்றக்கூடிய குணம் உண்டு. ஆனுல் மலபந்தம் செய்யும்.

9. ஸ்னானபானுதிகளுக்கு உஷ்ணேதகத்தையே உபயோகிப்பதுமிகவும் நன்மை. போஜன காலத்தில் உஷ்ணேதகம் உபயோகிக்க வேணும் என்பதற்கு நம்பர்மாசார்யாளான சங்கரர்ஷி மானஸிகபூஜையில்

उष्णोदकैः पाणियुगं मुखं च प्रक्षाल्य मातः कलधौतपात्रे ।
कर्पूरमिश्रेण सकुंकुमेन हस्तौ समुद्वर्तय चन्दनेन ॥

உஷ்ணோதகை: பாணியுகம் முகம் ச ப்ரக்ஷால்ய மாத: கலதௌதபாத்ரே । கர்பூரமிச்ரேண ஸகுங்குமேன ஹஸ்தௌ ஸமுத்வர்தய சந்தனேன ॥

ஹே அம்பா ! வென்னீரால் இரண்டு கைகளையும் முகத்தையும் அலம்பிக்கொண்டு பச்சைக்கர்பூரம் குங்குமப்பூ சேர்த்த சந்தனத்தால் கைகளைப் பூசிக்கொள்ளு என்ருர்.

இதனால் போஜனகாலத்தில் உஷ்ணோதகம் உபயோகித்தால் கையிலுள்ள குளிர்ச்சி நீங்கி சீதோஷ்ணம் ஸமப்படுவது தைலப் பிசுக்குகள் நீங்குவது போஜனாந்தத்தில் சந்தனம் உபயோகிக்க வேணுமென்பதும் விளங்குகிறது. சந்தனத்தின் பெருமை.

चन्दनं सकलभोगिनां धनं शम्बरारिवरसूत्रबन्धनम् ।
वर्णपुष्टिबलशौर्यवर्धनं शोभनं च सुरपूजने सदा ॥ धन्वन्तरी ।

சந்தநம் ஸகலபோகிநாம் தநம் ஸம்பராரிவரஸூத்ர
பந்தநம் । வர்ணபுஷ்டிபலசௌர்யவர்தநம் சோபநம் ச
ஸுரபூஜநே ஸதா ॥ தந்வந்தரீ ।

சந்தனம் ஸகலமான சுபசோபனாதிகளுக்கும் மூலதனமாக இருக்கிறது. ஸ்திரீபுமான்களுக்கு காமோத்ரேகத்தையுண்டுபண்ண ஸாதகமாக இருக்கிறது சரீரத்தில் நல்ல வர்ணம், சரீரவிருத்தி பலம், பராக்கிரமம், இவைகளைத் தருகிறது தேவதைகளின் பூஜைக்கு உபயோகம் லக்ஷ்மீகடாக்ஷம் இப்படியுள்ள குணங்கள் சந்தனத்திற்கு உண்டு.

10. முன் ஒரு சமயம் போஜராஜனுக்கு சிரஸில் ரோகம் வந்ததாயும் அதை பூலோகவைத்தியர்களால்நிவர்த்திக்க முடியாமல் தேவலோகத்தில் இருந்து தேவ வைத்தியர்கள் அச்வினீ தேவதைகள் வந்து கபால சோதனை செய்து ஸ்வஸ்தப்படுத்திப் போகையில் ராஜனுக்குப் பிரக்ஞை வந்து பத்தியம் கெட்கையில்

अशीतेनाम्भसा स्नानं पयःपानं वराःस्त्रियः ।
एतद्वो मानुषाः पथ्यं स्निग्धमुष्णं च भोजनम् ॥

அசீதேநாம்பஸா ஸ்நாநம் பய:பாநம் வரா:ஸ்த்ரிய: ।
ஏதத்வோ மாநுஷா: பத்யம் ஸ்நிக்தமுஷ்ணம் ச போஜநம் ॥

வென்னீரால் ஸ்னானமும் பால்குடிப்பதும் உத்தம ஸ்திரீ நிஷேவணமும் நன்றாய் வெந்து உஷ்ணத்துடன் உள்ள போஜனமும், ஹே மனிதர்களே உங்களுக்குப்பத்தியம் என்று சொன்னார்கள். இதனால் ஸ்னானபானங்களுக்கு வென்னீர் அவச்யம் என்பது விளங்குகிறது. உத்தம ஸ்திரீகளென்றால் விவாஹம் செய்த ஸ்வதாரங்கள் என்று தாத்பர்யம்,

11. பனிகாலத்தில் கழனிகளில் சம்பா நெல் பயிரில் தங்கியிருக்கும் பனிஜலத்தை சல்லாத்துணிகளால் துவட்டிப் பிழிந்தெ

டுப்பது. அந்த ஜலம் வைத்ய முறைகளுக்கு உபயோகப்படும் இப்படி ஜலத்தின் சுத்தி தெரிந்தவரை எழுதியிருக்கிறது. இனி ஸ்னானபேதங்கள் எழுதலாகும்,

பூலோகத்தில் ஜலத்திற்குப் பெருமை இருப்பதுபோல் தேவலோகத்திலும் மகிமையுண்டு. தேவகெங்கை இருக்கிறது. நக்ஷத்திரங்களில் பூராட நக்ஷத்திரம் ஜலதைவம் இருக்கிறது. ஜலாதி தேவதை வருணநக்ஷத்திரம் சதையம் இருக்கிறது. துவாதச ராசிகளில் சக்கிரத்தில் கடகம், மீனம் மகாத்தின் பின்பாதி ஜல ராசிகளாக விபாகம் செய்திருக்கிறார்கள்.

கடகராசி ஸ்வரூபம்

**कर्कः कुळीराकृतिरम्बुसंस्थः** 𑌕𑌰𑍍𑌕𑌃 𑌕𑍁𑌳𑍀𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑌮𑍍𑌬𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌃

மீனராசி ஸ்வரூபம்

**जलं तु मीनद्वयमत्स्यराशिः** 𑌜𑌲𑌂 𑌤𑍁 𑌮𑍀𑌨𑌦𑍍𑌵𑌯𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌰𑌾𑌶𑌿𑌃

மகாராசிஸ்வரூபம்

**मृगार्धपूर्वो मकरोंबुगार्धः** 𑌮𑍃𑌗𑌾𑌰𑍍𑌧𑌪𑍂𑌰𑍍𑌵𑍋 𑌮𑌕𑌰𑍋𑌮𑍍𑌬𑍁𑌗𑌾𑌰𑍍𑌧𑌃

யவனேசுவரர் கிரகங்களிலும் சந்திரன் ஜலக்ரஹம்

सलिलमये शशिनि रवेः दीधितयो मूर्च्छितास्तमो नैशम् ।
क्षपयन्ति दर्पणोदरनिहिता इव मन्दिरस्यान्तः ॥

𑌸𑌲𑌿𑌲𑌮𑌯𑍇 𑌶𑌶𑌿𑌨𑌿 𑌰𑌵𑍇𑌃 𑌦𑍀𑌧𑌿𑌤𑌯𑍋 𑌮𑍂𑌰𑍍𑌚𑍍𑌛𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌮𑍋 𑌨𑍈𑌶𑌮𑍍 । 𑌕𑍍𑌷𑌪𑌯𑌨𑍍𑌤𑌿 𑌦𑌰𑍍𑌪𑌣𑍋𑌦𑌰𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌇𑌵 𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃 ॥

ஸ்னானபேதங்களைப்பற்றி இனி வெளியிடப்படும்.

(இன்னும்வரும்)

பனயப்பட்டி வேங்கடேசய்யர்.

---

## காலத்தின்கதி.

(250-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்போது நாம் விரும்பும் படிப்பு தற்காலம் நாகரீக ஆங்கிலேயப் படிப்புத்தான். ஏனெனில் இப்படிப்பால்தான் புருஷர்

கள் யாவரும் நம் இந்தியாவுக்கும், நம்மதத்திற்கும் மற்றும் வேண்டிய சகல விஷயங்களையும் கரைகண்டு இஷ்டானிஷ்டசாதனங்களை அடைந்தும் விலக்கியும் வருகிறோம். ஸ்திரீகளுக்கு இப்படிப்பில்லாததால் நாம்செய்யவிரும்பும்முன்னேற்றத்திற் கிணங்காமல் பழையநாள் ஆசாரத்திற்கு விரோதமென்று தடுத்து விடுகிறார்கள். பிரகிருதத்தில் விவாக விஷயத்தை எடுத்துக்கொள்வோம்.

விவாகம் மேல்நாட்டாரைப் போல் இஷ்டப்படி செய்வது தான் இக்காலத்திற்கு நலமென்று நம் படிப்பால் தெரிந்துகொண்டிருக்கிறோம். அவர்களிடம் சொன்னால் ஐயோ ! நம்மஆத்தில் அப்படி வழக்கமே இல்லை. பாபம் தைவஸம்மதமில்லை என்றெல்லாம் பழம்பாட்டையே பாடுகிறார்கள். ஆகையால் அவர்களையும் நம் இஷ்டப்படி இணக்கவேண்டுமாயின் நம் படிப்பையும் அவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். அப்போது இருவரும் ஒற்றுமையாய் லோக முன்னேற்றத்திற்கு மற்ற சகோதரர்களோடு தோள் கொடுக்கலாமென்பதே.

இது இப்போது நம் படிப்பு நல்ல படிப்பென்றும் நாம்செய்வது லோகோபகாரமானகாரியம் என்று நினைப்பவர்கள்மட்டிலும் எண்ணுவார்களேயன்றி வேறொருவரும் எண்ணமாட்டார்கள். ஸ்திரீகளுக்குப் படிப்பே சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லை என்பதையேநான்பிரமாணத்துடன் விரித்திருக்கிறேன். அதிலும்இக்காலத்துப்படிப்பினால் அவர்கள் மிகவும் கெட்டுப் புருஷனை லக்ஷ்யம் செய்யாது மதவாஸனையற்றுப் புருஷன்போல் கண்டவிடங்களிற் சென்று வெறுக்கத்தக்க பல ஆசாரங்களை அடைகிறார்களென்பது வெளிப்படையே மற்றும் அவர்களுக்குப் படிப்பு வேண்டியதுதானென்று வைத்துக்கொண்டாலும் இப்போதிய சட்டம் போதாது. டாக்டர் முத்துலெக்ஷ்மிரெட்டியார் சொல்லுகிறபடி 14-வயதுக்கு மேல் விவாகம் செய்வதாய் வைத்துக்கொள்வோம். அப்பதினான்கு வயதுக்குள் ஓர் பெண்மணி லோகோபகாரம் செய்யத்தக்கஞானத்தை முத்துலெக்ஷ்மி அம்மாள்போல் அடைந்துவிட முடியுமா. அம்மாள் இத்தகைய ஞானத்தைஅவ்வயதிற்குள் தான் அடைந்தார்களா. 14-வயதிற்கு மேல் இந்திய ஸ்திரீகள் படிக்கமாட்டார்களே அதற்கு மேல் இவ்வாழ்க்கையில் ஈடுபட்டு விடுவாளே. ஆகவே அதற்கு மேல் யாது செய்ய வேண்டுமென்றால் இன்னொரு சட்டமியற்ற வேண்டும். மாணாக்

கர்கள் எவ்விதம் பி.ஏ., பி.எல். முதலிய படிப்புகளுக்கு தேசாந் தாமும், அதற்கு மேல் த்வீபாந்தாமும், போகிறார்களோ அவ் விதம் ஸம அந்தஸ்துள்ள ஸ்திரீயும் போகலாமென்று இதைப் பற்றி வேறு விஷயம் தனி ைமயாய்க் கூறவேண்டியிருப்பதால். விரித்து அங்கு கூறுவாம். ஆகவே இதெல்லாம் ஆழ்ந்த யோ சனை இன்றி தேசத்தைப்பாழாக்கும் தொழிலிலேயே செலுத்தி விடுமாதல்பற்றி இ ந்த விடவேண்டும்.

இனி ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் இல்லாததால் அவர்களை கைதிகளைப் போல் நடத்துகிறோமென்கிறார்கள். இது ஒருநாளு மில்லை. இவ்விதம் இருக்கிறதென்பதை நீங்களே கூறுவீர்களா னால் மிஸ்மேயோவைப்பற்றிக்குறை கூற முன் வரவேண்டாம். நாமே அவள் சொன்ன தக் கூறுகிறவர்களாவோம். நம் சாஸ் திரங்கள் ஸ்திரீகளுக்குத் தான் வெகு மரியாதை செய்ய வேண்டு மென்றெழுதி இருக்கிறது. அவைகளை ஆழ்ந்து பார்த்தால் தர்ம சாஸ்திரங்கள் எழுதியவர்கள் ஸ்திரீகளாயிருக்கலாமென்றும், புரு ஷர்களை வஞ்சிப்பதற்காக புருஷர்கள் பெயர்வைக்கப்பட்டிருக்கிற தோ என்று கூட ஊகிக்கவேண்டியிருக்கிறது.

ஆகவே நம் தேசத்திற்கு ஒரு காலத்திலும் பொருத்தமற்ற தாயும், தேசம் கெடுவதற்கு முதல் வழியாயும், நம் அனாதி சித்த மான குலாசார நடவடிக் ககளை அடியோடு ஒழிப்பதாயும் விசே ஷமாய் பிராம்மண்யத்தை வேரோடு பிடுங்குவதாயுமான இத் தகைய அனீதியான மார்க்கத்தைச் சட்டமென்று கையில் தூக் கிச்செல்லும் நம்மவர்கள் ஆழ்ந்து யோசித்து மனதைத் திடப் படுத்திப் பார்த்துச் சரேலென இச்சட்டத்தைச் சுழற்றிக் கசக்கி எறியும்படி நம்பகவான் அவர்களது மனதில்புகுந்து வேலைசெய்ய வேண்டுமென்று கருணாநிதியைப் பிரார்த்திக்கின்றேன். கடைசி யாய் ஒரு வார்த்தை.

### நம்மதத்தைக் காப்பவர் யார்.

இதை ஒவ்வொருவரும் தனித்தனியே ஆலோசிக்கவேண் டும். இதற்கு இரண்டாவது மனிதனின் சகாயம் வேண்டாம்.

(இன்னும் வரும்)

M. N, சுப்ரமணியசாஸ்திரியள்.